Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

வாரம் - 33

பாடம்: தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம்: 11

தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க
- இவை மொழிவளத்தை அதிகரிப்பதற்காக உருவாக்கப்பட்ட பயிற்சியாகும்

---

பகுதி 1

01. பயனற்றது என்ற பொருள் தவிர்ந்த வேறுபொருளைத் தரும் உவமைத்தொடர்
(1) செவிடன் காதில் ஊதிய சங்குபோல
(2) காட்டில் எறித்த நிலாபோல
(3) கார்த்திகை பிறை கண்டது போல
(4) ஆற்றிலே கரைத்த புளிபோல

02. துன்பத்தில் மேல் துன்பம் வருவதால் எமது உள்ளம் பண்பட்டு தூய்மை அடையும் என்ற பொருள் தரும் உவமைத்தொடர்
(1) சுடச்சுடஒளிரும் பொன்போல
(2) குருடனுக்கு குருடன் வழிகாட்டியதுபோல
(3) வாடும் பயிருக்கு வான்மழைபோல
(4) பெருங்காற்றில் அகப்பட்ட துரும்புபோல

03. அவனைத்திருத்துவதென்பது கல்லிலே நாருரிப்பது போன்ற செயலாகும். கல்லில் நாருரித்தல் என்றால்
(1) மிகவும் கடினமான செயல்
(2) மிகவும் எளிதான செயல்
(3) பயிற்சியுடன் கூடிய செயல்
(4) பயன்தரும் செயல்

04. அவன் தனதுசெயல்களை எல்லாம் பூசிமெழுகினான். இங்கு பூசி மெழுகுதல் என்பது
(1) குற்றத்தை மறைத்தல்
(2) மற்றவரை மடக்குதல்
(3) ஏமாற்றுதல்
(4) ஊரறியச்செய்தல்

05. அவன் ஒரு கையாலாகாதவன். இங்கு கையாலாகாதவன் என்றால்
(1) கை இயலாதவன்
(2) அன்பு இல்லாதவன்
(3) வேலைசெய்யும் திறமையற்றவன்
(4) உதவிசெய்யமுடியாதவன்

பகுதி 2

02. பின்வரும் பாடல்களை படித்து அதன் கீழ் வரும் வினாக்களுக்கு விடை தருக

1. கான் ஆள உனை விடுத்த கண் இலா அருள் இலி தன் காதல் மைந்தன்
தான் ஆளும் தரணி எல்லாம் ஒரு குடை கீழ் நீ ஆள தருவன் இன்றே
மேல் நாள் நம் உரிமை அற கவர்ந்த பெரும் துணைவன் உனை வெறாத வண்ணம்
வான் ஆள வானவர் கோன் தன்பதம் அவன் தனக்கே வழங்குவேன்

1. கண்ணிலா அருளிலி என அழைக்கப்படுபவன் யார்?
2. அருளிலி என்பதன் கருத்து யாது?
3. வானவர்கோன் தன்பதம் என்று குறிப்பிடப்படுவது யாது?

2. விரி குழல் பைந்தொடி நாணி வேந்து அவையில் முறையிடு நாள் வெகுளேல் என்று
மரபினுக்கும் நமக்கும் உலகு உள்ள அளவும் தீராத வசையே கண்டாய்
எரி தழல் கானகம் அகன்றும் இன்னமும் வெம் பகை முடிக்க இளையா நின்றாய்
அரவு உயர்ந்தோன் கொடுமையினும் முரசு உயர்ந்தோய் உனது அருளுக்கு அஞ்சினேனே

1. அரவுயர்ந்தோன் முரசுயர்ந்தோன் என குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?
2. முரசுயர்ந்தோன் செயல்களாக குறிப்பிடப்படுபவை எவை?

03. பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமாக விடை எழுதுக

1. தமிழர் பண்பாடு என்ற கட்டுரையில் ஒழுக்கம் பற்றி கூறப்பட்டவற்றை சுருக்கமாக எழுதுக? (10புள்ளி)